Sensational!

Heart of the Rideau Canal

மனதைக் கொள்ளை கொள்ளும் **ஸ்மித்ஸ் ஃபால்ஸ்**

**ஸ்மித்ஸ் ஃபால்ஸுக்கு நல்வரவு**

உங்கள் தொழில் அல்லது இல்ல முகவரிக்காக ஸ்மித்ஸ் ஃபால்ஸைத் தேர்வு செய்தால், நீங்கள் முழுமையான, தொழில்வணிகத்திற்கு உகந்த, நல்லதொரு இடத்தில் அமைந்த ஒரு சமூகத்தைத் தேர்வு செய்கிறீர்கள் என்று பொருள். இந்த முழுமையான சேவைகள் கொண்ட சமூகத்தின் நன்மைகள் ஏராளம்.

www.smithsfalls.ca

**இடம்**

எங்கள் ஊர் கிழக்கு  ஒன்ராறியோவில் நடுப்பகுதியில் அமைந்திருக்கிறது. இந்தச் சமூகம் கிங்ஸ்டனுக்கும் ஒ ற்ராவாவிற்கும் இடையில், அமெரிக்க எல்லைக்கு வாகனப் பயண தூரம் குறைவாக உள்ள இடத்தில் இருக்கிறது.

**சாலைகள்:** ஒற்ராவாவிற்கும் கிங்ஸ்டனுக்கும் எளிதில் செல்ல உதவும் பல வகையான நெடுஞ்சாலைகள் இருக்கின்றன. ஹைவே 15, கவுன்டி ரோடு 29 மற்றும் 43 ஆகியவை வெளியில் உள்ள சமூகங்களுக்கும் 400 தொடர் நெடுஞ்சாலைகள் பலவற்றுக்கும் துரிதமாகச் செல்ல உதவுகின்றன.

**ரயில்:**: கனடிய பசிஃபிக் ரயில்வே பாதையில் அமைந்திருக்கிறது. CP மற்றும் CN ரெயில் ஆகிய இரண்டிற்கும் கொள்கலன் சேவைகள் இருக்கின்றன. தொழில் சார்ந்த பயணத்திற்குத் துரித வசதி அளிக்க ஒரு வியா ரெயில் நிலையமும் உள்ளது.

**நீர்:** செயின்ட் லாரன்ஸ் ஆற்றிலிருந்து 35 நிமிட தூரத்திற்குள் இருப்பதால் எல்லை கடப்புப் பகுதிகளையும் சரக்கு இறக்குதல் நிலையங்களையும் துரிதமாக அடையலாம்.

**விமானம்:** ஊருக்குச் சற்று வெளியே அமைந்திருப்பது ரஸ் பீச் ஸ்மித்ஸ் ஃபால்ஸ் மான்டேக் விமான நிலையம். இந்த விமான நிலையத்தில் சிறு சொந்த விமானங்களுக்கும் நடு அளவிலான வணிக விமானங்களுக்கும் இடம் உண்டு. பெரிய விமானங்களுக்கும் சரக்கு விமானங்களுக்கும், ஸ்மித்ஸ் ஃபால்ஸிலிருந்து வெறும் 67 கி.மீ. தூரத்தில் ஒட்டா ஒற்ராவா சர்வதேச விமான நிலையம் உள்ளது. அங்கிருந்து பெரும்பாலான மையங்களுக்கு ஒரு மணிநேரத்திற்கு ஒரு விமானம் செல்கிறது.

**வாழ்க்கைத் தரம்**

ஸ்மித்ஸ் ஃபால்ஸில் ஒரு நட்பார்ந்த, வரலாற்றுப் பின்னணியுள்ள சமூகத்தின் நன்மைகளும் வளரும் ஊரின் கலகலப்பான இயல்பும் ஒருசேரக் கிடைக்கின்றன. நிறுவனங்கள், குடும்பங்கள் ஆகிய இரண்டுமே வளரவும் செழிப்படையவும் அத்தியாவசிய வசதிகளை ஸ்மித்ஸ் ஃபால்ஸ் அளிக்கிறது.



**கல்வி**

ஸ்மித்ஸ் ஃபால்ஸில் எல்லா வயது வரம்பினரையும் திருப்திப்படுத்த ஏராளமான கல்வி வசதிகள் இருக்கின்றன. இந்தச் சமூகம் குழந்தை கவனிப்பு வசதிகள், பொது மற்றும் தனியார் பள்ளிகள், அத்துடன் இரண்டாம்நிலை மற்றும் பின் இரண்டாம்நிலைக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை வழங்குகின்றன. பல வகைச் சேவைகள் குறிப்பான வேண்டுகோள்களை நிறைவேற்றும் வகையில் அமைக்கப்பட்ட தொழிற்பயிற்சியையும் பட்டறைகளையும் வழங்குகின்றன. ஸ்மித்ஸ் ஃபால்ஸ் ஒற்றாவாவிலும் கிங்ஸ்டனிலும் உள்ள மிகப் பெரிய பல்கலைக்கழக, கல்லூரி வளாகங்களுக்கும் அருகில் உள்ளது.

**நகராட்சி அமைப்பும் சேவைகளும்**

ஸ்மித்ஸ் ஃபால்ஸ் என்ற இந்த ஊரை ஒரு மேயரும் ஆறு கவுன்சிலர்களும் நிர்வகிக்கிறார்கள். ஒரு அவசர சூழ்நிலை ஏற்பட்டால் கையாள ஸ்மித்ஸ் ஃபால்ஸில் நன்கு பயிற்சி பெற்ற, புதிய உபகரணங்களைக் கொண்ட தீயணைப்பு மற்றும் காவல் துறையினர் இருக்கிறார்கள். எங்கள் சமூகத்திற்கு சேவையளிப்பது ஒன்றாறியோ ஹைட்ரோ. இயற்கை வாயு தேவையுள்ளவர்களுக்கு சிக்கலின்றி கிடைக்கிறது. ஒரு Cat ஸ்கேன் பிரிவும் அணுகல் மையமும் பொது உடல்நலப் பிரிவும் உள்பட பல வகை உடல்நலச் சேவைகளும் கொண்ட ஒரு மருத்துவமனை புதுப்பிக்கப்படுவதில் ஸ்மித்ஸ் ஃபால்ஸ் மகிழ்ச்சியடைகிறது. வீட்டுவசதி கட்டுப்படியாகும் விலையில் உள்ளது. ஒவ்வொருவருடைய ஆர்வங்களையும் நிறைவேற்றப் பல வகையான வீட்டு வடிவமைப்புகள் இருக்கின்றன. எங்கள் சமூகத்தில் அதிவேக இணையச் சேவையும் அத்துடன் அதிநவீன ஒளியிழை கேபிள் வசதியும் உள்ளன.

**பொருளாதார வளர்ச்சி**

மக்கள்தொகையியல் தகவல்கள் மற்றும் புள்ளிவிவரங்களிலிருந்து ஊரில் கிடைக்கும் நிலம் மற்றும் சொத்துகள் வரை பல வகையான விஷயங்களைப் பற்றித் தகவல்களை வழங்குகிறோம். எங்கள் தொழில்முறைக் கையேடு மத்திய அரசு, மாகாண அரசு, மற்றும் நகராட்சி வழங்கும் தொழில்வணிக ஊக்கத் திட்டங்களை விவரிக்கிறது.
**மேலும் தகவல் அறிய** எங்கள்  இணையத்தளத்திற்கு வாருங்கள்:
www.advantagesmithsfalls.ca

புதியவர்கள் வாழவும் பணிபுரியவும் விளையாடவும் கூட ஸ்மித்ஸ் ஃபால்ஸ் பொருத்தமான இடம். www.immigratetosmithsfalls.ca அனைத்துத் தகவல் ஆதாரங்களையும் உள்ளூர் சமூகத்தின் சிறப்பம்சங்களையும் பார்க்க ஒரு திறந்த சாளரமாக இருக்கிறது.

**கலாச்சாரமும் கேளிக்கைப் பொழுதுபோக்குகளும்**

ஸ்மித்ஸ் ஃபால்ஸ் எல்லா கலாச்சாரங்களைச் சேர்ந்த மக்களையும் வரவேற்கும் ஒரு ஆங்கிலம் பேசும் சமூகம். சீனர்கள், தெற்காசியர்கள், பிலிப்பைன்ஸ் நாட்டவர்கள், லத்தீன் அமெரிக்கர்கள், கொரிய நாட்டவர்கள், ஜப்பானியர்கள், கிரேக்கர்கள், இத்தாலியர்கள், ரஷ்யர்கள் ஆகியோர் இதன் புலம்பெயர்ந்த குழுக்களில் அடக்கம்.



இந்தப் பகுதியின் பல விதமான ஏரிகளும் நீர்வழிகளும் வெளியிட நடவடிக்கைகளை வழங்குகின்றன. பல வகையான கலைகள் மற்றும் கலாச்சார, விளையாட்டு மற்றும் கேளிக்கைத் திட்டங்கள் ஆண்டு முழுவதும் உள்ளன. அதே போல சேவை மன்றங்களும் பிற சமூக அமைப்புகளும் உண்டு.

**சுற்றுலா**

ரிடோ கால்வாயின் மையத்தில், வரலாறு மற்றும் இயற்கையின் பின்னணியில் ஓய்வுநேர மற்றும் கேளிக்கை நடவடிக்கைகளின் தனித்துவமான கலவையைப் பார்க்கலாம். எனவே, எங்கள் நட்பார்ந்த சமூகத்தின் காட்சி, ஒலி, வாசனை, சுவை, தொடுதல் ஆகியவற்றில் மூழ்குங்கள்.

ரிடோ கால்வாயில் சொகுசுக் கப்பல் பயணத்தை ஓய்வுடன் ரசிப்பதாக இருந்தாலும் சரி, அந்த காலத்து பாணியில் பூங்காவில் பிக்னிக் செல்வதாக இருந்தாலும் சரி, இங்கே ஒவ்வொருவர் ரசனைக்கும் ஏதாவது ஒன்று இருக்கிறது.

வரலாற்றுப் பிரியர்கள் வியூக ரீதியான முக்கியத்துவம் உள்ள எங்கள் இடம் எப்படி இந்த ஊரின் பாரம்பரியத்திற்கு வடிவம் கொடுத்தது என்று கண்டறியுங்கள். பழைய காலத்து ஆலைத் தொழிலாளர் ஒருவருடைய வீட்டுக்குச் செல்லுங்கள். ரிடோ கால்வாய் எப்படிக் கட்டப்பட்டது, தானிய மில் ஆலைகளின் பங்கு, பின்னர் எங்கள் மூதாதையர்களுக்கு செல்வச் செழிப்பை அளித்த ரயில்வே அமைப்பின் பங்கு ஆகியவற்றையெல்லாம் தெரிந்துகொள்ளுங்கள்.

**மேலும் தகவல் அறியத் தொடர்பு கொள்ளுங்கள்:**
**த  டவுன் ஆஃப் ஸ்மித்ஸ் ஃபால்ஸ்**
**எக்கனொமிக் டெவலப்மன்ட் டிப்பார்ட்மன்ட் –(பொருளாதார அபிவிருத்தித் துறை)**
**economicdevelopment@smithsfalls.ca**
**1.888.983.4124**
**www.advantagesmithsfalls.ca**

